மேல்மாகாணக் கல்வித் திணைக்களம் - ஆரம்பப்பிரிவு

தரம் 05 மாணவர்களுக்கான மாதிரி பரீட்சை வினாத்தாள் 2026

முயற்சி செய்வோம் அச்சமின்றி முகம் கொடுப்போம்.

MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENT'S FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2026

வினாத்தாள் - I

03

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை**
- **இவ்வினாத்தாளிலேயே தருக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
1	
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்துக்களில்	

	முதலெழுத்தோப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பீடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்தகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். மொத்தப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

Education
கல்வி
අධ්‍යාපන

[பக். 2 ஐப் பார்க்க

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. பின்வரும் உருக்களில் ஒன்று வேறுபட்டுள்ளது. அவ் உருவைத் தெரிவு செய்க.

(1) (2) (3)

* 2ம் , 3ம் வினாக்களில் தரப்பட்டுள்ள கூட்டத்துடன் சேர்ப்பதற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

2.



(1) (2) (3)

3.

(1) (2) (3)

4. A,B ஆகிய இரு உருக்களிலும் காணப்படுகின்ற வேறுபாடுகள் எத்தனை?

A B



(1) 2 (2) 3 (3) 4

5. முதலில் உள்ள உருவின் வெற்றிடத்தில் வரவேண்டிய மிகச் சரியான உரு எது?



(1) (2) (3)

kalvi.lk

6. பின்வரும் மூன்று உருக்களில் ஒர் உரு வேறுபட்டுள்ளது. அதனைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

7. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உரு எது?

(1)



(2)

(3)

8. இரண்டு தூண்களுக்கு இடையே 3 கொடிகள் நடப்பட்டுள்ளன. அவ்வாறான 8 தூண்களுக்கிடையே எத்தனை கொடிகள் நடமுடியும்?

(1) 21 (2) 24 (3) 20

9. சபிக்ஷனிடம் உள்ள பணத்தைப் போன்று 3 மடங்கு பணம் பானுவிடம் உள்ளது. சபிக்ஷனின் தம்பியிடம் சபிக்ஷனிடம் உள்ள பணத்தைப் போன்று 4 மடங்கு பணம் உள்ளது. மூவரிடமும் உள்ள மொத்தப் பணம் ரூபாய் 320.00 எனின் பானுவிடம் உள்ள பணம் எவ்வளவு?

(1) ரூபாய்160.00 (2) ரூபாய்40.00 (3) ரூபாய்120.00

10. வகுப்பொன்றில் உள்ள மாணவர்களில் மேசை ஒன்றிற்கு 5 பேர் வீதம் அமர்ந்தால் 2 மேசைகள் மிகுதியாகும். மேசை ஒன்றிற்கு 4 மாணவர்கள் வீதம் அமர்ந்தால் 10 மாணவர்களுக்கு அமர்வதற்கு இடமில்லை எனில் அந்த அறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் மேசைகளின் எண்ணிக்கையும் முறையே?

(1) 90 மாணவர்கள் 20 மேசைகள்

(2) 40 மாணவர்கள் 10 மேசைகள்

(3) 20 மாணவர்கள் 08 மேசைகள்

11. 220 இல் இருந்து 229 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 2 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

(1) 21 (2) 22 (3) 20

12. பெட்டியொன்றிலிருந்த பச்சை நிறப் பந்துகளினதும், மஞ்சள் நிறப்பந்துகளினதும் எண்ணிக்கை 60 எனின் உருவிலுள்ள தகவல்களுக்கேற்ப பச்சைநிறப் பந்துகளினதும், மஞ்சள் நிறப் பந்துகளினதும் எண்ணிக்கை முறையே ?

(1) 30 45

(2) 15 30

(3) 45 15

13. A,B,C,D ஆகிய நான்கு எழுத்துக்களையும் பயன்படுத்தி எத்தனை எழுத்துச் சோடிகளை உருவாக்க முடியும்?

(1) 7 (2) 6 (3) 5

kalvi.lk

14. நிருக்ஷன் திங்கட்கிழமையிலும் பார்க்க ரூ.10 குறைவாகச் செவ்வாய்க்கிழமையிலும், செவ்வாய்க்கிழமையிலும் பார்க்க ரூ.5 குறைவாகப் புதன்கிழமையிலும் செலவு செய்தான். அவன் செவ்வாய்க்கிழமை ரூ.30 ஐச் செலவு செய்தால் மூன்று நாட்களிலும் செலவு செய்த மொத்தப் பணம் யாது?

(1) ரூபாய் 75.00 (2) ரூபாய் 90.00 (3) ரூபாய் 95.00

15. ஒரு கயிறு இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சமதுண்டுகளாக வெட்டப்பட்டது. சிறிய துண்டின் நீளம் 1மீற்றர் எனின் தொடக்கத்தில் இருந்த கயிற்றின் நீளம் யாது?

(1) 8மீற்றர் (2) 5மீற்றர் (3) 4மீற்றர்

16. ஒரு வட்டவடிவமான கடதாசியை 6 பகுதிகளாப் பிரித்து கறுப்பு, சிவப்பு, பச்சை, நீலம், ஊதா ஆகிய நிறங்கள் ஒழுங்கு முறையில் தீட்டப்பட்டுள்ளன. எனின் சிவப்பு நிறத்திற்கு எதிரே தீட்டப்பட்ட நிறம் யாது?

(1) நீலம் (2) கறுப்பு (3) ஊதா

* 17ஆம், 18ஆம் வினாக்களுக்குப் பின்வரும் கவிதையை வாசித்துப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க

"காலைக்கருக்கலில் எழுந்திடுவான்
கலப்பை தோளில் சுமந்திடுவான்
ஓலைக்குடிசையில் வாழ்ந்தாலும்
ஓயாமல் உழைப்பை ஈந்திடுவான்"

17. கவிதையில் சிறப்பிக்கப்படும் தொழிலாளி யார்?

(1) மீனவன் (2) உழவன் (3) குயவன்

18. அத் தொழிலாளியின் வசிப்பிடம் எது?

(1) வயல் (2) மாடி வீடு (3) ஓலைக்குடிசை

19. அருகேயுள்ள உருவைப் புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கும் போது (உட்பக்கமாக) எழுத்துக்கள் மிகச் சரியாகக் காணப்படும் உரு எது?



20. பேருந்து ஒன்றில் குறித்த பயணிகள் பயணஞ் செய்தனர். அடுத்த தரிப்பிடத்தில் 12 பேர் இறங்க 5 பேர் ஏறினார். இப்போது பேருந்தில் 50 பயணிகள் இருந்தனர் எனின் ஆரம்பத்தில் இருந்தோர் எத்தனை பேர்?

(1) 57 பேர் (2) 55 பேர் (3) 47 பேர்

kalvi.lk

21. தேசிகா ஒரு வாரத்திற்கு வீட்டில் இருந்து பாடசாலைக்குச் சென்று வருவதற்குப் பேருந்துக் கட்டணமாக ரூபா 180.00 ஐ செலுத்தி வருகிறாள். கிலோமீற்றர் ஒன்றிற்கு பேருந்துக் கட்டணமாக ரூபா 3.00 அறவிடப்பட்டால் தேசிகாவின் வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையே உள்ள தூரம் யாது?

(1) 8km (2) 6km (3) 12km

22.  இவ் உருவினை அம்புக்குறி வழியே பார்க்கும் போது தோன்றும் விதத்தைக் காட்டும் உரு எது?



(1)



(2)

(3)

23. புகழன் மா மரத்தில் முதல் நாள் 15 மாம்பழங்கள் பறித்தான். இனிவரும் ஒவ்வொரு நாட்களும் முதல் நாளை விட 6 பழங்கள் கூடுதலாகப் பறிப்பான். இதன்படி 5 நாட்களில் அவன்பறித்த மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 180 (2) 125 (3) 135

24. சாப்பாட்டு மேசை ஒன்றின் நான்கு பக்கங்களிலும் லிதுசன், விதுசன், சன்சிகன், லதுர்ஜன் ஆகியோர் இருந்து சாப்பிட்டனர். லிதுசனின் இடது பக்கம் விதுசன் இருந்தான். சன்சிகனின் இடதுபக்கம் லதுர்ஜன் இருந்தான். லதுர்ஜன் லிதுசனுக்கு எப்பக்கத்தில் இருந்தான்?

(1) வலது (2) இடது (3) முன்பக்கம்

25. சுலக்சனா 4 கணக்குகளைச் செய்து முடிக்கும் நேரத்தில் கிருசாளினி 12 கணக்குகளைச் செய்வாள். லக்ஷயா 5 கணக்குகளைச் செய்யும் போது அபிராமி 7 கணக்குகளைச் செய்வாள். கிருஷாளினி 4 கணக்குகளைச் செய்யும் போது அபிராமி 3 கணக்குகளைச் செய்வாள் எனின் குறிப்பிட்ட நேரத்தில் அதிக கணக்குகளைச் செய்பவர் யார்?

(1) கிருஷாளினி (2) அபிராமி (3) லக்ஷயா

* 26ம், 27ம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக?

சோபிகா - 15 நிமிடத்தில் 8 பக்கம் வாசிப்பாள்
தேனுகா - 12 நிமிடத்தில் 10 பக்கம் வாசிப்பாள்
சண்சிகா - 20 நிமிடத்தில் 16 பக்கம் வாசிப்பாள்

26. மூன்று நபர்களிலும் குறைந்த நேரத்தில் கூடுதலான பக்கங்களைப் படிப்பவர் யார்?

(1) சோபிகா (2) தேனுகா (3) சண்சிகா

27. இவர்கள் மூவரும் அரை மணித்தியாலத்தில் எத்தனை பக்கங்களைப் படிப்பார்கள்?

(1) 65 (2) 84 (3) 60

kalvi.lk

* தம்பியிடம் 100 ரூபாய் தாள்காசு சிலவும், 50 ரூபாய் தாள் காசு சிலவும் இருந்தன. அவன் முதலில் ரூபாய் 100.00 தாள்காசையும் அடுத்து ரூபாய் 50.00 தாள்காசுமாக மாறி மாறி அடுக்கினான்.

28. தம்பி 9 தாள்காசுகளை அடுக்கி வைத்திருப்பானாயின் நடுவில் உள்ள தாள்காசின் பெறுமதி யாது?

(1) ரூபாய் 50.00 (2) ரூபாய் 100.00 (3) இரண்டுமில்லை

29. 9 தாள் காசுகளினதும் மொத்தப் பெறுமதி யாது?

(1) ரூபாய் 600.00 (2) ரூபாய் 650.00 (3) ரூபாய் 700.00

30. கலையாழ் தனது வீட்டில் இருந்து தெற்கு நோக்கி 2K m பயணஞ் செய்து பின் மேற்குத் திசை நோக்கி 1k m தூரம் பயணஞ் செய்து பின்பு வடதிசையாக 2k m தூரம் பயணஞ் செய்தாள். மறு படியும் இடதுபுறம் திரும்பி 3k m தூரம் சென்றாள். அவள் பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து பயணத்தை நிறைவு செய்த இடம் வரையான தூரம் யாது?

(1) 8km (2) 4km (3) 7km

31. கடிகாரம் ஒன்று ஒவ்வொரு மணித்தியாலமும் 5நிமிடங்கள் குறைவாகக் காட்டும் .காலை 6.00 சரி செய்யப்பட்டு வைக்கப்பட்ட கடிகாரம் மாலை 6.00 மணிக்கு என்ன நேரத்தைக் காட்டியிருக்கும்?

(1) பி.ப 5.00 (2) பி.ப 4.55 (3) பி.ப 5.05

* பின்வரும் இரு உருக்களையும் பயன்படுத்தி 32ம், 33ம் வினாக்களுக்கு விடை தருக.

குறைவு ⟶ கூட

கூட ⟵ குறைவு



உரு-01



உரு-02

32. கூடுதலாக உள்ள மின்குமிழ்கள் எவை?

(1) சிவப்பு (2) மஞ்சள் (3) வெள்ளை

33. குறைவான மின்குமிழ்களில் இருந்து கூடுதலான மின்குமிழ்கள் வரை ஒழுங்குபடுத்தும் போது முறையாக அமைவது?

(1) சிவப்பு, மஞ்சள், வெள்ளை

(2) மஞ்சள், சிவப்பு, வெள்ளை

(3) வெள்ளை, சிவப்பு, மஞ்சள்

kalvi.lk

34. சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை எனும் ஐந்து நிறக் கொடிகள் ஒரே வரிசையில் தொங்கவிடப்பட்டிருந்தன.

@ கொடிகளில் 4 வது நிறம் வெள்ளையாகும்

@ சிவப்புநிறத்திலிருந்து மூன்றாவதாக இருப்பது நீல நிறம்

@ பச்சையும் மஞ்சளும் அடுத்தடுத்து இல்லை

இதன்படி 2,5 ஆகிய கொடிகளின் நிறங்கள் முறையே

(1) சிவப்பு, மஞ்சள் (2) சிவப்பு, நீலம் (3) பச்சை, நீலம்

35. கோலத்திற்கேற்ப வினாக்குறிகள் இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்களைக் காட்டுவது?



(1) (2) (3)

36. இங்குள்ள கட்டங்களில் ஏதோ ஒர் ஒழுங்கில் எண்கள் இடப்பட்டுள்ளன. அதன்படி வெற்றுக் கட்டங்களுக்குள் வரவேண்டிய எண்கள் எவை?

5	10	15	20	45	50
1	4	7	25	40	55
....	.....	10	30	35	60
....	22	25	28	31	A



(1) (2) (3)

37. A என்ற எழுத்துள்ள கட்டத்திற்குள் வரவேண்டிய பொருத்தமான எண் யாது?

(1) 34 (2) 35 (3) 63

38. அருகேயுள்ள சதுரமுகியினை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் சரியான வடிவம் யாது?



(1) (2) (3)

kalvi.lk

* **39ம், 40ம் வினாக்களை அவதானித்துச் சரியான விடையைத் தெரிவு செய்க?**

உரு A யை மடித்து உரு B பெறப்பட்டுள்ளது. B எனக்குறிப்பிட்ட உருக்களில் அடையாளமிடப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ளது. அதனை விரிக்கும் போது தோன்றும் வடிவம் யாது?

39



40.



Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

மேல்மாகாணக் கல்வித் திணைக்களம் - ஆரம்பப்பிரிவு

தரம் 05 மாணவர்களுக்கான மாதிரி பரீட்சை வினாத்தாள் 2026

முயற்சி செய்வோம் அச்சமின்றி முகம் கொடுப்போம்.

MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENT'S FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES **மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2026**

வினாத்தாள் - II

03

ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.**
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- **விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.**
- **செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
1	
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்துக்களில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பீடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்தகின்றேன்.	
	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். மொத்தப் புள்ளிகள் சரியாகும்.	
	V/I/T/CH

kalvi.lk

(01) கீழேயுள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இங்கிலாந்தின் ஸ்டான்ஸ்டட் கோட்டையில் ஒரு வாத்து ஒன்பது குஞ்சுகளைப் பொரித்தது. வாத்தும் குஞ்சுகளும் இரை தேடி சுற்றித் திரிந்ததை அங்கிருந்த நாய் ஒன்று கவனித்து வந்தது. திடீரென்று தாய் வாத்து காணாமல் போய் விட்டது. நரி தூக்கிச் சென்றுவிட்டது. தாய் இன்றித் தவித்த வாத்துக் குஞ்சுகளை நாய் அரவணைத்துக் கொண்டது. நாய் செல்லும் இடமெல்லாம் குஞ்சுகளும் கூடவே சென்றன. நாயின் தலைமீது ஏறி நின்றன. நாயின் முதுகில் வரிசையாக அமர்ந்து கொண்டு வலம் வந்தன.

1. வாத்து எத்தனை குஞ்சுகளைப் பொரித்தது?

.....

2. வாத்துக் குஞ்சுகளை அரவணைத்த பிராணி எது?

.....

3. தாய் வாத்தை தூக்கிச் சென்ற பிராணி எது?

.....

4. உணவு என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக?

.....

5. இடம் + எல்லாம் என்ற சொல்லைச் சேர்த்து எழுதுக?

.....

6. சென்றன என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

.....

(02) தரப்பட்டுள்ள வாக்கியங்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. நான் ..... மரத்திலிருந்து அழகிய மலர்களைப் பறித்தேன்.
(அலரி / அலறி)

2. மாலா ..... கொண்டு கடதாசியை வெட்டினாள்
(கத்திரிக்கோல் / கத்தரிக்கோல்)

Education கல்வி அபியாஜன

(3) கீழ்வரும் சொற்களின் திருத்தமான வடிவத்தை எழுதுக?

1. தண்ணம்பிக்கை :.....

2. புத்திசாளி :.....

(4) கீறிட்ட இடங்களில் வரவேண்டிய பொருத்தமான எழுத்தை எழுதுக?

1. மெ.....குவர்த்தியின் வெ.....ச்சத்தினால் இருள் விலகியது.

2. வ.....சையில் நிற்குமாறு மாணவர்கள் அ.....வுறுத்தப்பட்டனர்.

(5) கீழ்வரும் சொற்களுக்கான எதிர்ப்பாற் சொற்களை எழுதுக?

1. பேரரசர் :..... 2. பாக்கியவான் :.....

(6) கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்ட சொற்களுக்குரிய ஒத்தகருத்து, எதிர்க்கருத்துச் சொற்களை உரிய இடங்களில் எழுதுக.

இல	சொற்கள்	ஒத்தகருத்துச் சொல்	எதிர்க்கருத்துச் சொல்
1	துன்பம்	----------	----------
2	அண்மை	----------	----------

(7) யானை - போதகம் எனின் : கீரி - .....

(8) பனை - ஓலை எனின் : புல் - .....

(9) கீழ்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் ஆக்குக?

பின்னாலும் / இருக்கும் / வெற்றியின் / எந்தவொரு / வலியும் வேதனையும் / நினைவிற் கொள் / என்பதை

.....

.....

(10) நெல் - அரிசி எனின் மாம்பழம் - .....

* **சரியான விடையைத் தெரிவு செய்க.**

(11) வில்லியம் ஹோகிங் எழுதிய உலகப்புகழ் பெற்ற நூல் எது?

(ஆன்மீக வாதி / காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம் / பீர்பால் கதைகள்)

(12) "காய்கள் கட்டிய வெருளி" எனும் பாடலை இயற்றியவர் யார்?

(கவிஞர் செல்ல கணபதி / பாயிஷா அலி / பண்டிதர் ச. சச்சுதானந்தன்)

(13) கீழ்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக?

How old are you?

.....

kalvi.lk

(14) கீழ்வரும் படங்களை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய எழுத்தை தெரிவு செய்க?



(1) **Snak..... (k,e)**

(2) Brinj.....l (o,a)

(15) இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க?

1. How Many dogs ..... (is, are) there?

2. What ..... (is, are) this fruit?

(16) கீழ்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

ඔයාකේ පෙන්සල කොහෙද?

.....

(17) கீழ்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறும் முறையை தமிழில் எழுதுக.

அண்ணா இருக்கிறார்.

.....

கீழ்வரும் வினாக்களுக்கான விடைகளை எழுதுக?

(18) 7099 என்ற இலக்கத்துடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் விடையை சொற்களில் எழுதுக.

.....

(19) கீழ்வரும் எண்களில் 9 இன் மடங்குகளை இறங்கு வரிசையில் எழுதுக.

19, 27, 54, 82, 36, 46, 58, 99

.....

(20) 1. 287 - 278 = கழித்து வரும் விடையை உரோமன் எண்ணில் எழுதுக. .....

2. 1895 ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டிற்குரியது? .....

(21) கீழ்வரும் கணிதச் செய்கையை அவதானித்து எண் சட்டத்தில் வரவேண்டிய எண்ணை வரைக?



kalvi.lk

(22)  அருகே உருவில் இனங்காணக்கூடிய முக்கோணிகள் எத்தனை?

.....

(23)  அருகே உள்ள உருவிற்கு வரையக்கூடிய எல்லாச் சமச்சீர் அச்சுக்களையும் வரைக.

(24) 650 பேனாக்களை ஒருவருக்கு 6 வீதம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. மீதியாக உள்ள பேனாக்களுடன் எத்தனை பேனைகளைச் சேர்ப்பதன் மூலம் மேலும் ஒருவருக்கு 6 பேனைகளை வழங்க முடியும்?

.....

(25) ரூபா 45 பெறுமதியான 306 பயிற்சிக் கொப்பிகளை ஒருவருக்கு மூன்று வீதம் எத்தனை பேருக்குப் பங்கிட முடியும்? .....

(26) கீழ்வரும் பற்றுச்சீட்டைப் பூர்த்தி செய்க?

அளவு	kg ஒன்றின் விலை	பொருள்	தொகை
2kg	290.00	சீனி	ரூபாய்.....
.....	320.00	மா	ரூபாய் 160.00

(27) நகரம் E இலிருந்து நகரம் D வரையுள்ள தூரம் 3km 850m ஆகும். நகரம் D இலிருந்து நகரம் C வரையுள்ள தூரம் 9km 250m ஆகும். நகரம் E இலிருந்து நகரம் D இனூடாக நகரம் C வரை உள்ள மொத்தத் தூரம் யாது?

.....

(28) தரம் 5 மாணவர்கள் விரும்பும் உணவு தொடர்பான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. வகுப்பில் 28 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் எனின்....

உணவு	மாணவர் எண்ணிக்கை
தோசை	08
இடியப்பம்	02
பாண்	12
பிட்டு	.....



1. பிட்டை விரும்பும் மாணவர் எண்ணிக்கையை அட்டவணையில் எழுதுக அதனை வரைபில் வரைந்து காட்டுக?
2. இடியப்பத்தைவிட தோசையை விரும்புவோர் எத்தனை பேர் அதிகமாகும்?

.....

kalvi.lk

(29) போட்டி ஒன்றில் பங்குபற்றிய 6 மாணவர்களுக்கு தலா ரூபாய் 500, ரூபாய் 100 ஆகிய பணப் பரிசு வழங்கப்பட்டது எனின்:

1. அங்கு வழங்கப்பட்ட மொத்தப் பணப்பரிசு எவ்வளவு? .....

2. ஒருவருக்குக் கிடைத்த பணம் எவ்வளவு? .....

(30) தை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

1. வாகை 2. இறப்பர் 3. பலா

(31) மாலையில் மலரும் பூ எது?

1. அந்திமந்தாரை 2. ரோஜா 3. அலரி

(32) நூலகத்தில் காட்டக் கூடிய சரியான நடத்தை ஒன்று

1. உரத்துப் பேசுதல் 2. புத்தகத்தைக் கிழித்தல் 3. அமைதி பேணுதல்

(33) குந்துகாலி என அழைக்கப்படும் பறவை எது?

1. காகம் 2. தூக்கணாங்குருவி 3. நரைப்புளுனி

(34) சூரிய நமஸ்காரத்தின் மூன்றாம் படி நிலையைக் காட்டும் உரு எது?

1.

2.

3.

(35) மேசன் வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணங்களின் சரியான கூட்டத்தைத் தெரிவு செய்க ?

1. குறடு, தள்ளுவண்டி, சவள், உளி, மண்வெட்டி.

2. நீர்மட்டம், தூக்குக் குண்டு, சவள், மணியாசு, மட்டப்பலகை.

3. உளி, சீவுளி, அரம், துறப்பணம், மூலைமட்டம்.

(36) பகல் வேளையில் பாடசாலைத் தோட்டத்தில் கூடுதலாகக் காணப்படும் பிராணி எது?

1. தேனி 2. காகம் 3. ஆந்தை

(37) காற்று வீசும் திசையை அறிய உதவும் வித்து

1. புலிநகம் 2. ஆடைபொட்டி 3. சீதேவியார் செங்கழுநீர்

(38) வகுப்பாசிரியை கல்யாணி நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி ஒன்றின் மீது நீர்த்துளி ஒன்றை இட்டார். அதன் போது நிகழக்கூடியது

1. நீர் மெதுவாக சூடாகும், நிறம் மாறும்.

2. ஒலி எழும், நீர் ஆவியாகும்.

3. நீர் படிப்படியாகக் குறையும், நிறம் மாறாது.

kalvi.lk

(39) பின்வருவனவற்றுள் தொற்றா நோயாகக் கருதக் கூடியது எது?

1. இரைப்பையழற்சி 2. சீதபேதி 3. சின்னமுத்து

(40) இவ் உருவில் காணப்படும் தேசிய வீரர் யார்?

1. கலாநிதி. ஆனந்தக்குமாரசுவாமி
2. ஆதர். சி. கிளார்க்
3. சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா

(41) கொத்தன் என அழைக்கப்படும் தொழிலாளி யார்?

1. மேசன் 2. விவசாயி 3. தச்சன்

(42) இலவசமாகக் கிடைக்கும் சேவைகளில் ஒன்று ?

1. மின்சாரம் 2. போக்குவரத்து 3. சுகாதாரம்

(43) உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுக்கூறு எது?

1.புரதம் 2. மாப்பொருள் 3. கொழுப்பு

(44) உமது பிரதேசத்தில் தொற்று நோய் பரவுவது தொடர்பாக முதலில் யாருக்கு அறிவிக்க வேண்டும்?

1. பொலிஸ் 2. கிராமசேவையாளர் 3. பொதுச்சுகாதார பரிசோதகர் (PHI)

(45) மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாதங்கள் இருக்கும் பிராணி எது?

1. ஒணான் 2. பல்லி 3. உடும்பு

(46) இலையுண்ணி, ஊனுண்ணி, அனைத்துமுண்ணி முறையே உள்ள பிராணிகள் எவை?

1. ஆடு, தும்பி, மனிதன் 2. மான், நாய், கோழி 3. முயல், நரி, தும்பி

(47) இலங்கையில் உள்ள பின்வரும் மாகாணங்களில் கரையோர மாகாணம் எது?

1 மத்திய மாகாணம் 2. ஊவா மாகாணம் 3. கிழக்கு மாகாணம்

(48) பற்சில்லுகளைக் கொண்ட ஓர் உபகரணம்

1. மின்விசிறி 2. துவிச்சக்கரவண்டி 3. ஒற்றைச்சில்லு வண்டி

(49) மீள் சுழற்சிக்குட்படுத்தக் கூடியது என்பதைக் காட்டுவதற்கு உலகெங்கும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் நியமமான குறியீடு?

(1)

(2)

(3)

kalvi.lk

(50) நீர் வெறுப்பு நோயை ஏற்படுத்தும் பிராணி அல்லாதது

1. நாய் 2. குரங்கு 3. எலி

(51) கடதாசிக்கழிவுகளை இடவேண்டிய குப்பைக்கூடையின் நிறம் யாது?

1. நீலம் 2. பச்சை 3. சிவப்பு

(52) நெல்லை அறுவடை செய்த பின்பு தூற்றுவதற்காகவும் அரிசி புடைப்பதற்காகவும் பயன்படுவது

1. நுகத்தடி 2. சுளகு 3. அரிதட்டு

(53) இவ் உபகரணம் (கைவில்லை) பயன்படுத்தப்படுவது?

1. எழுத்துக்களை உருப்பெருத்துப் பார்ப்பதற்கு
2. சிறிய எழுத்துக்களை அழிப்பதற்கு
3. வைரஸ்கிருமிகளை அழிப்பதற்கு

(54) எதிர்காலச் சந்ததியினர் பயன்பெறும் பொருட்டு இலங்கைக்கு நாம் செய்யக் கூடிய முதலீடாக அமையக் கூடியது.

1. பணத்தைச் சேமித்து வைத்தல்
2. பயிர்ச் செய்கையில் ஈடுபடல்
3. மரம் ஒன்றினை நாட்டுதல்

(55) வீதிச் சமிக்ஞை விளக்குகளில் பச்சை நிற மின்குமிழ் ஒளிரும் போது கருதப்படுவது.

1. நிறுத்துக 2. பயணிக்குக 3. பயணிப்பதற்கு ஆயத்தமாகுக

(56) "ஏரைக்கொண்டு நிலம் உழுவான் எல்லோருக்கும் உணவளிப்பான்" இது எவ்வகைப் பாடல்?

1. உழவர் பாடல் 2. அரிவி வெட்டுப்பாடல் 3. கப்பற்பாடல்

(57) மலைப்பிரதேசத்தில் மரங்களைத் தறித்தல், மண்ணை வெட்டி அகற்றுதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தம்.

1. இடிமின்னல் 2. மண்சரிவு 3. வெள்ளப்பெருக்கு

(58)தன்னிறைவையும் செழிப்பையும் வெளிப்படுத்தும் அரச இலச்சினையில் உள்ள குறியீடு எது?

1. நெற்கதிர் 2. நிறை குடம் 3. தர்ம சக்கரம்

(59) இவ்வாறான மேல் ஆடையணிந்து செய்யப்படும் வேலை.

1. அரிவு வெட்டுதல்.
2. தையல் வேலை செய்தல்.
3. உணவு சமைத்தல், பரிமாறல்.

kalvi.lk

(60) தரப்பட்ட காட்சிப் படத்தை அவதானித்து ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருக்கக் கூடியவாறு மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk